வெளியீடு எண் 176.

# அமைதி:



அடைவு:
693
636

திருக்கயிலாய பரம்
பரைத்தருமபுர ஆதீனம்
25வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய
தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
ஆணையால் வெளி
வருவது.

1948.

எழுதியவர்:
ஆதீனக்கல்லூரிப் பேராசிரியர்,
ச. தண்டபாணி தேசிகர்.

பிரசாரவாகன வெளியீடு:—

1. நல்வழி.
2. இன்பம்.
3. அமைதி.

ஞானசம்பந்தம், பதிப்பகம்:
— தருமபுரம். —

உ

636

# இவ்வளவுதான் என்விருப்பம்.

இன்பங் கண்ட விடத்து அமைதி நிலவுதல் இயற்கையல்லவா? ஆதலால் **அமைதி வருகிறது.** இந்த **அமைதியில்** அதனை அடையப்பலவேறு வழிகளில் முயற்சித்த ஒருவனது வரலாறு இருக்கிறது. அவனுக்குக் கிடைத்த உபதேச மொழிகளும் இருக்கின்றன. அமைதியே மக்கள் வாழ்க்கையினை வளர்க்கும் அமுதம். அமைதியான வாழ்வில் நரை திரையில்லை; தளர்ச்சி வளர்ச்சியில்லை; என்றும் ஒரேவிதமான மகிழ்ச்சி இருக்கும்.

ஆதலால் அனைவரும் இந்த **அமைதியைப்** பெற்றுப்பயன் கொள்ளவேண்டுகிறேன்.

# அமைதி.

நமக்கெல்லாம் மனம்ஒருநிலையில் இருப்பதில்லை. இன்றைக்கு நாவற்பழத்தை நாடுகிறது. நாளைக்கு நாரத்தம்பழத்தை நாடுகிறது. நாடிப் பெற்ற உடனுவது நல்லமகிழ்ச்சி யிருக்கிறதா? பெறுவதற்கு முன்னிருந்த ஆர்வம் பெற்ற பிறகு இருப்பதில்லை. பெற்ற பிறகு வெறுப்புக்கூட உண்டாகிவிடுகிறது. கைக்குக் கிடைத்த பலாப்பழம் கசக்கிறது. கிடைக்காத களாக்காய் இனிக்கிறது. இப்படியாக நம்மனம் ஒன்றை விட்டு ஒன்றுபற்றி அலைந்துகொண்டே யிருக்கிறது. இந்த நிலையை அநுபவவாயிலாக அறிந்த ஞானியொருவர்க்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. மனத்தைப் பார்த்து அழைக்கிறார்: பட்டம் சூட்டி. "மனமெனும் மூடக் குரங்குப்பயலே" என்று.

இப்படி அலைகின்ற மனத்திற்கு அமைதியுண்டா? அமைதியில்லாத இடத்தில்ஆனந்தம் விளையுமா? அலைகின்றகடல் கலங்கிக்கொண்டே இருக்கிறது. அலையாத கடலிடத்துத் தெளிவு இருக்கிறது. ஆழமிருக்கிறது. அதுபோல அலையாத மனத்திற்கும்.

உழைத்தவனுக்கு ஓய்வு உணவு. பேசிக்கொண்டே இருப்பவனுக்கு மௌனம் மருந்து. படித்துக் களைத்தவனுக்கு விளையாட்டு விருந்து. அதுபோல அலைகின்ற மனத்திற்கு அமைதி அளவிலா ஆனந்தம்.

## அமைதி எங்கே யிருக்கிறது:

இது இருக்கிற இடம் கண்டுபிடிப்பதுதான் அருமை. இந்த அமைதிக்கண்டம் அமெரிக்காகண்டத்தைக் கண்டுபிடித்தகொலம்பசுக்காவது தெரியுமா? அமைதியொளி மின்னொளிகண்ட எடிஸனுக்காவது

தெரியுமா? அமைதிநுணுக்கத்தைக் கணக்கு நுணுக்கத்தைக்கண்ட நியூத்தனுவது அறிவாரா?

## அமைதி யிருப்பிடம் ஆராய்ந்த ஒருவன்:

வேளா வேளைக்கு ஒருவயிற்றுச் சோற்றுக்குப் பலர் கையைப் பார்த்திருக்கும் ஏழைக்குடும்பத்தில் பிறந்த பரம்பரைத் தரித்திரன் ஒருவன் இருந்தான். அவனைச்சுற்றி எங்கும் சஞ்சலம். சோறு சஞ்சலம். துணி சஞ்சலம். ஒண்ட இடம்: உட்காரத் திண்ணை: நடக்குந்தெரு எல்லாம் சஞ்சலம். அவனுடைய ஒழியாச் சஞ்சலம் தனக்கும் ஒரு ஓய்வை நாடிற்று. அமைதியை ஆராயச் செய்தது. அதனுல் அமைதித் தெய்வத்தைத் தேடிப் புறப்பட்டான். விடா உழைப்பை மேற்கொண்டான். தீராப் பஞ்சம் போராய் மூண்டு பெரும்பொருளைக் குவிக்கிறதல்லவா? இளைத்த உடல் பருக்கிறதல்லவா? அதுபோல இவனுக்கும் உலைவு ஊக்கமாகிறது. அமைதி எங்கே? அமைதியைத் தெரிவிக்கும் ஆசாரியன் யார்? என்று தேடிப்புறப்பட்டான்.

# 4

அப்போது அவ்வூரரசன் எடுபிடிகளும் கெடுபிடிகளுஞ்சூழ, ஆடம்பரமாக ஆனைமீது அம்பாரிவைத்து அதன்மேல் ஏறிக்கொண்டு பவனி வருகிறான். அவன் முகத்தே புன்முறுவல் தவழ்கின்றது. வருவார் போவார், வணங்குவார் எழுவார், வழங்குவார் வாங்குவார் இவர்களைக் கண்டதும்அரசன் 'நமது கையையல்லவா எல்லாரும் எதிர்பார்க்கிறார்கள்' என்று எண்ணுகிறான். உடனே புன்முறுவல் முகமலர்ச்சியாகிறது. இதனைக் கண்டதும் அமைதியைத் தேடி வந்த வறியவன் மனம், இங்கல்லவா அமைதியிருக்கிறது; என்ன மகிழ்ச்சி! என்னமகிழ்ச்சி! என்று எண்ணுகிறது. அரசனுடைய அமைதி அவன் உடுத்திய ஆடையிலிருக்கிறது. அணியிலிருக்கிறது. ஆனையிலிருக்கிறது. சேனையிலிருக்கிறது. அரண்மனையிலிருக்கிறது. அந்தப்புரத்திலிருக்கிறது. எல்லா அமைதியுஞ் சேர்ந்து இவன் நெஞ்சிலிருக்கிறது. நெஞ்சில் நிறைந்து முகத்தில் வழிகிறது. ஆதலால் அரசனையடைந்தால் நாம்சிறிது அமைதி கற்றுக்

கொள்ளலாம் என்று எண்ணினான். பின் தொடர்ந்து சென்றான். பவனி அரண்மனைவாயிலில் முடிந்தது. அரசன் கீழே இறங்கி அரண்மனைக்குள் நுழைந்தான். அமைதிகற்க வந்த சீடன் கூடப்புகமுடியுமா? இவனுடைய இடுப்பில் சரிகை வேட்டி யில்லையே. கந்தைத்துணிதானே தோரணங்களாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றன. தொந்தி பருத்தில்லையே. பலநாள் பட்டினியால் ஒட்டிக் கிடக்கிறதே! ஆதலால் வாயில்காவலாளிகள் வைது ஒதுக்கிவிட்டனர். வந்த வறியவன் அமைதி கற்கும் பள்ளிக்கூடத்திலுமா நாம்புக முடியாது என்று எண்ணி ஏமாந்து நின்றான்.

நண்பகல் வந்தது. வெயில் வெப்பம். காவலாளி கண்ணயர்ந்தான். அவன் சோம்பல் இவனை உள்ளே யனுப்பிவிட்டது. ஒண்டி ஒண்டி உட்காவலையும் எப்படியோ தாண்டி, அரசனுடைய அந்தப்புரச் சோலையை யடைந்துவிட்டான். அப்போது மாலை நேரம். ‘எப்படியாவது உள்ளேபோய் அரசனைக்

கண்டு அமைதியுபதேசம் அடைந்து விடலாம்' என்ற நம்பிக்கை பிறந்தது. சோலையிலே ஒதுங்கி நிற்கிறான். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல அரசன் வருகிறான். ஆட்சித்திறம் பற்றிய சூழ்ச்சித் தொல்லையால் அவன் மனத்தில் கவலைப்புயல் சுற்றி யடிக்கிறது. பகைக்கோட்டை பற்றியெரிகிறது. அரசனுடைய மானமும், தற்பெருமையுமாகிய சருகு கள் சூழ்ச்சிச் சுழல்காற்றில் அகப்பட்டு வானமளவும் உயர்ந்து சுழல்கின்றன. இந்த நிலையில் அரசன் வருகிறான்.

அரசனைக் கண்டதும் இவன் மனத்தில் சந்தேகம். அங்கு ஆனைமேற்கண்ட அரசனுடைய மகிழ்ந்த முகம் எங்கே? இவனது ஏக்கம் பிடித்தமுகம் எங்கே? இருந்தாலும் நெருங்குவோம். கேட்போம் என்று எண்ணி அணுகுகிறான். கால்களில் வீழ்கிறான். அரசனுக்கோ அந்தப்புரச் சோலையில் வந்ததால் ஆறாதகோபம்.

"யாரடா நீ ?"

"அரசே! நான் ஒரு பரம ஏழை. ஆனால் திருடனல்ல; கொலைகாரனல்ல; அமைதியை நாடியலைகின்றேன். இன்றுகாலை பவனி வரும்போது தங்களை வீதியிற் கண்டேன். தங்களிடம் அமைதியும் ஆனந்தமும் நிலவின. அதனைக் கற்றுக் கொண்டு போகலாம் என்றுதான் வந்தேன். ஆதரித்தருள வேண்டும் அரசே! ".

"என்ன! அமைதியா! என்னிடத்திலா! அப்பா நான் சர்க்கரைபூசிய விஷம். இன்பம் பூசிய துன்பம். என்னிடம் அமைதிபூசிய அலைச்சலே இருக்கிறது. ஒருகணமும் அமைதியை நான் கண்டதில்லை. என்னுடைய மனைவியையும் நம்பாது என்மனம் அலைகிறது மந்திரியை நம்பாது அலைகிறது. மக்களை நம்பாது நடுங்குகிறது. என்னுடைய அலைந்த மனம் நல்லவர்களைக் கெட்டவர்களாக எண்ணுகிறது. கெட்டவர்களை நல்லவர்களாக எண்ணிஏமாறுகிறது.

சூழ்ச்சிக்காரர்கள் சுற்றி யிருந்துகொண்டே சொல்லுக்குச் சொல் கூழைக் கும்பிடு போட்டுக் குடியைக் கெடுக்கிறார்கள். அப்படியிருக்க என்னிடத்திலா அமைதி படிக்க வந்தாய்! எங்காவது உனக்கு அமைதி கிட்டுமானால் என்னையும் மறந்துவிடாதே. எனக்கும் வந்து கற்றுக் கொடு. உன்னைப்போல இந்த விஷயத்தில் இவ்வளவு ஊக்கமுடையவனைக் கண்டதேயில்லை. நீ யொரு பரம சாது. போய்வா'' என்று அனுப்புகிறான் அரசன்.

வந்த வறியவன் இவ்வளவு செல்வம் நிறைந்த இடத்திலேயே- செல்வாக்கு நிறைந்த இடத்திலேயே- எடுப்பார் பிடிப்பார் ஏத்துவார் உள்ளஇடத்திலேயே அமைதி கற்றுக்கொள்ளமுடியவில்லையானால் வேறு எங்கே போவது; என்று திரும்புகிறான். கடை வீதி வழியாகச் செல்கிறான்.

எதிரிலே ஏட்டுக்கட்டைத் தோளில் சுமந்த ஒருவர் வருகிறார். வாயிலே பாட்டு வழிகிறது. ஆதலால்

இவரிடம் அமைதி நிறைந்திருக்க வேண்டும் என்று எண்ணுகிருன்.

"ஐய! தாங்கள் பெரிய படிப்பாளி போலிருக்கிறதே!"

"ஆம். என்னவோ மகா வித்துவான் என்று இந்த ஊரில் என்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளுவார்கள். "பிரதிவாதிபயங்கரம்," "ஞானசூரியன்" "சகலாகம சாஸ்திரவித்" என்றெல்லாம் பலபட்டங்கள் உண்டு; அதைப்பற்றி இப்போதென்ன! தாங்கள் யார்? என்னைப் பின்தொடர்ந்து வரக் காரணம் என்ன?,,

"ஒன்றுமில்லை. என் மனம் என்னசெய்தாலும் அமைதியின்றி அலைந்து கொண்டே யிருக்கிறது. அமைதியிருக்கும் இடமும், அடையும் வழியும் தேடி வருகிறேன். அரசனிடம் சென்றேன். அங்கொன்றும் கிடைக்கவில்லை. தங்களிடம் கேட்டுத் தெரியலாம் என்று எண்ணுகிறேன்."

# 10

"அப்படியா இதென்ன பிரமாதம். கவியுலகத்தில் திரிபவர்க்குக் கவலையேது? கற்பனையுலகம் சுவர்க்கந்தான். வயிற்றுப் பசியுந் தெரியாமல் வருணனை யமுதத்தை வாரிவாரிக் குடித்தால் அமைதி, தானே வந்து விடும். கொஞ்சம் அந்தவழியில் முயற்சிப்பது தானே!"

"தாங்களே கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு வழிகாட்டுங்கள்."

"ஏது இவன்! விடமாட்டான் போலிருக்கிறதே; சொல்லித்தொலைத்தால் போகமாட்டான் போலிருக்கிறதே. உண்மையைச் சொல்லித் தொலைப்போம்."

"என்ன ஐயா யோசிக்கிறீர்கள். எப்படியாவது உபதேசித்துத்தான் ஆகவேண்டும்."

"நான் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நான் ஓயாமல் படித்துக் கொண்டுதானிருக்கிறேன்.

# 11

ஆனாலும் அமைதியில்லை. ஓயாப் படிப்பு ஒழியாக் கவலையாய்த் தானிருக்கிறது. படிக்கப் படிக்கப் படியாமை தோன்றுகிறது. அதனால் மேலும் மேலும் கிளர்ச்சியும் எழுச்சியுமே நான் கண்ட முடிவுகள். ஆகையால் நீ என்னிடமா அமைதியை நாடுகிறாய்! எங்காவது புலியினிடம் ஜீவகாருண்யம் கற்கப் போகலாமா! பொறாமைக்காரனிடம் பொறுமை கற்கப் போகலாமா? திருடனிடம் அடைக்கலம் புகலாமா' எண்ணிப்பார். என்னிடம் எல்லாம் வெளி வேஷமான அமைதிதான். என்னைக்கண்டு ஏமாறாதே! வேறு எங்காவது போய்க் கற்றுக்கொள். இது உண்மை."

என்ன! என்ன! இங்குமா தோல்வி! எல்லாம் அப்படித்தானே! என் முயற்சி சாகாத வீட்டில் வெள்ளைக்கடுகு வாங்கச் சென்றபார்ப்பனியின் கதையாகப் போய்விடுமோ! ஆயினும்......பார்ப்போம். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்', 'முயற்சி

திருவினையாக்கும்', 'முயன்றால் முடியாப்பொருளுளவோ?' முயன்றுபார்ப்போம். என்று எண்ணிக்கொண்டே ஒரு ஆற்றங்கரையோரமாகப் போய்க்கொண்டிருக்கிறான்.

வழியில் ஒருமணல்மேடு. அதன்மேற் தழைத்த முந்திரி மரங்கள் நிழல் செய்கின்றன. அதன் பக்கத்தில் சிறுதென்னந்தோப்பு. அதிற் குடும்பச்சொத்தாகியமுருங்கமரம் மூன்று நிற்கின்றன. அதன் ஓரத்தில் ஒருசிறுகுடிசை. குடிசைத் திண்ணை யொன்றில் கோழிக்குஞ்சுகளின் நடுவே அதன் தாய்க்கோழியும் சேவலும். அவைகள் தங்கள் மொழியில் என்னவோ பேசிக் கொள்கின்றன. குஞ்சுகள் சுற்றிச்சுற்றி வருகின்றன. ஒரு திண்ணையில் பத்துக் குழந்தைகள். அவற்றின் நடுவில் தாயும் தந்தையுமாக இருவர் இருந்தனர். அவர்கள் நிலையிலும் கவலையில்லை. பொறுமையில்லை, சூழ்ச்சி யில்லை, துன்பமில்லை என்று தோன்றுகிறது இவனுக்கு.

அவர்கள் கையிருப்பெல்லாம் உடலில் உறுதியும் மனத்தில் ஊக்கமும், பானையில் காலைக்கஞ்சியுமே. அதற்குள் அவர்கள் மன அமைதி யடங்கியிருக்கிறது. இதனை இவன் கண்டானோ? அவர்களை யணுகி "மிக மகிழ்ச்சியாக இருக்கிறீர்போல் இருக்கிறதே இந்த இரகசியத்தைக் கொஞ்சம் சொல்லிக் கொடுக்க கூடாதா?" என்றான்.

"ஆம் எங்களிடம் அமைதியிருக்கிறது. ஆனந்தம் இருக்கிறது. எது வரையில்? எங்கள் பானை காலி யாகும் வரையில். காலையில் வேலைகிடைக்கும் வரை யில். வேலைக்குக் கூலி கிடைக்கும் வரையில். பெற்ற கூலிக்கு வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்கள் கிடைக்கும் வரையில். அதற்குமேல் நாங்களும் உங்களைப்போலத்தான். எங்களிடமா முழுஅமைதி கற்கவந்தீர்'.

இவ்வளவு நிலை தெரிந்தும் இவர்கள் கலங்க வில்லையே! மலர்ச்சி யிருக்கிறதே! இவர்களிடம்

அமைதியில்லையா? ஆம் முழுஅமைதி யில்லை. காலையில் அமைதியிருக்கிறது. மாலையில் அமைதி யிருக்கிறது. இடையே கலக்கமும் இருக்கிறது.

ஆனல் அவ்வமைதி நிலைத்ததாக இல்லையே! நிலைத்த அமைதியை நாடுவது எங்கே! என்ற பெருமுயற்சி பிறந்தது. மேற்கே போகிருன். தண்பொழில் நடுவே தவமுதியோரொருவர் தகதகவென விளங்குகின்ற மேனியொடு சடை தாழக் கவலை என்பது சிறிதுமின்றி ஒளிமுகம் வீச எதனையோ உற்றுநோக்கிக் கொண்டிருந்தார். அவரைக்கண்டதும் இவன் மனம் அளவிலா ஆனந்தம் கொண்டது. ஆழமான ஆற்றைப்போல இவர்மனம் கலங்கவில்லை என்பதை இவர் முகம் காட்டுகிறதே. 'இவரிடம் தான் அமைதியை நாடவேண்டும்' என்றுஅணுகிருன்.

அவரோ சித்தத்தைச் சிவன்பாலே வைத்து உட்கார்ந்திருந்தார். அவர் நிட்டை கலையும் வரையில் பக்கத்தில் நின்றுகொண்டே இருந்தான். அவர் கண்

விழித்த நேரமும் இவன் காலில் விழுந்த நேரமும் ஒன்றுயிருந்தது.

"அன்பனே! எழுந்திரு; என்னவேண்டும்?"

"சுவாமி! ஒருபெரும் பொருளை நாடி அரசனிடம் சென்றேன்; அறிஞனிடம் சென்றேன்; உழவனிடம் சென்றேன் ஓரிடத்திலும் முற்றும் அடைந்தே னில்லை. இங்கே வந்ததும் என் மனம் என்னவோ மகிழ்ச்சிக்கடலில் முக்குளிக்கிறது. அதனுல் நான் தேடிவந்த பொருள் இங்கேயே இருக்கிறது என்று துணிந்தேன்."

"அப்பா! நீ தேடிவந்ததைச் சொல்லாமல் என்ன வெல்லாமோ சொல்லுகிறுயே'."

"சுவாமி! உலகமெல்லாம் ஓடியாயிற்று. எங்கும் அமைதியைக்காணேம். அமைதிச்செல்வம் இருக்கும் இடத்தை அறிவிக்கவேண்டும்."

"அதுவா; தோண்டப்படாத ஆழமான இடத்தில், மிகமிக அகலமான இடத்தில், மிகமிக நீளமான இடத்தில், குறையாமலே நிறைவான இடத்தில், மலையை விட உயர்ந்த இடத்தில் இருக்கிறது. நீயறியவேண்டுமானால் தாழத்தாழச் சுருங்கிச்சுருங்கிப் போக வேண்டும்".

"சுவாமி! தாங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே; சித்தர்கள் செய்த வைத்தியநூல் மாதிரி இருக்கிறதே, விளங்கச் சொல்லவேண்டும்".

"அதுதான் கடலைவிட ஆழமும், உலகத்தை விடப்பரப்பும், எங்கும் நிறைவும், உயர்வும் உடைய பொருள்; அது தான் கடவுள்பொருள். அதனைத்தான் எண்ணிப் பார்த்து வருகிறேன். அதனால்தான் என்னிடம் சிறிது அமைதிஇருக்கிறது. நீ முயன்றால் முழுதும் பெறலாம். இவ்வளவு தூரம் தேடிவந்த உனக்கு அதனை அடைவதும் பெரிதல்ல; விடாப்பிடி

யாக முயற்சிசெய்; ஆனால் உன் அமைதிக்கு-முயற்சிக்குப் பங்கம் விளையக்கூடியதாகச் சிலபோராட்டங்கள் உன்மனத்துக்குள்ளேயே நிகழும். அடிக்கடி உன் சூழலின் பழக்கத்தால், சுற்றியிருப்போருடைய உபதேசத்தால் உன்மனம் அமைதிதந்த ஆண்டவனை மறக்கவும் செய்யும். 'கடவுளாவது கிடவுளாவது கடவுளுக்கும் நமக்கும் என்ன தொடர்பு. மனிதன் உழைப்பே எல்லா இன்பத்தையும் ஆக்குகிறது. ஆதலால், மனிதன் உழைப்பை நம்பியே வாழவேண்டும். உழைப்பே ஊதியம்' என்றெல்லாம் சிலர் உபதேசிப்பார்கள். இந்த உபதேசம் காலத்திற்கு ஏற்றதாக இருக்கும். எப்போதும் வரம்பில்லா ஒன்று இனிப்பாகத்தானே இருக்கும். அதில் ஏமாந்து விடாதே; வானமிடிந்தாலும் மண்கம்பமானாலும் தெய்வம் உண்டென்ற நம்பிக்கை தளரக்கூடாது. உறுதியே உயர்வளிக்கும். உறுதி யில்லையானால் உள்ளதும் பலிக்காது. ஆதலால் **தெய்வம் உண்டென்றிரு. அதுவும் ஒன்றென்றிரு.**

இனி, இரண்டாவதாக நீஎன்னதான் அமைதித் தெய்வத்தை மனத்திற்குள்ளேயே காண்பவனுக இருந்தாலும், ஆலய வழிபாடு செய்யத்தான்வேண்டும். அப்படிச் செய்யச் செல்கின்றகாலத்து, கோயிலுக்குள் நுழைந்தது முதல் பலவேறு திருவுருவங்களைக் காண்பாய். அப்போது சமயம் பார்த்திருந்த உன் மனம் உன்னைச் சந்தியிலிழுத்துவிட முயற்சிக்கும். என்னையா? எத்தனைசாமி. இத்தனைச் சாமியையும் மனிதன் வணங்கவேண்டுமா? என்ற ஒருபெரிய சந்தேகத்தைக் கிளப்பிவிடும். கிளப்பி உன் அமைதியைக் குலைக்கும். நீ கொஞ்சம் ஏமாந்தாய் ஆனுல் இவ்வளவு நாள் அரும்பாடுபட்டுத் தேடின அமைதி இருந்த இடம் தெரியாது மறைந்து போகும். அப்போது நான் சொல்வதை மனத்தில் மறவாது வைத்துக்கொள். இறைவனுக்கு வடிவம் இல்லை; வடிவம் இல்லாதபோது பெயரும் இல்லை. தொழிலும் இல்லை. ஆனுல் இப்படி அமைந்த வடிவம் முதலியஎல்லாம் உயிர்களாகியநம்மீதுவைத்த பெருங்

கருணையினால் விளைந்தனவே. வீரம் வேண்டி வழிபடுகின்றவர்களுக்கு வீரனாக, மணம் வேண்டி வழிபடுகின்றவர்களுக்கு மணவாளனாக, குழந்தை வேண்டி வழிபடுகின்றவர்களுக்குக் குழந்தைவேலனோடு கூடிய சோமாஸ்கந்த மூர்த்தியாக எல்லாம் இருக்கின்றார். "உருமேனிதரித்துக்கொண்டது என்றல் நம்தம் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு" என்று சித்தியார் என்னும் ஞானநூல் சொல்லும். ஆதலால் 'பலவடிவம்கொண்டதும்' பலபெயர் கொண்டதும், படைத்தல் முதலிய தொழில்களைச்செய்வதும் நம்மை உய்விக்கும் பொருட்டே என்பதை உறுதியாய்க் கொள்ளவேண்டும்.

மூன்றாவதாக, தன்னை ஒரு உத்தியோகஸ்தனாக நினைக்கச் சட்டையும் தலைப்பாகையும் எவ்வாறு அவசியமோ; ஒருபெண் ஒருவனுக்குரியவளாவள் என்பதை யறிய எப்படித் தாலியும் மஞ்சளும் அவசியமோ? அப்படியே; என்னதான் தெய்வ

நம்பிக்கை இருந்தாலும் அடிக்கடி அந்தநினைப்பு மாறாமலிருக்க விபூதி, திருமண்காப்பு, மாலைகள், ஐந்தெழுத்து எட்டெழுத்து ஜெபம் முதலியன அவசியம். இவைகளே பெருங் கோட்டைகளாக அமைதியரசனைப் பாதுகாத்துக்கொண்டிருக்கும்.

நான்காவதாக அமைதியடைந்து இறைவன் தாளில் இன்பமார்ந்திருக்கும் குரு-அடியார்கள் இவர்களிடம் அன்பாயிரு. இதுவும் நீ அடைந்த அமைதியைப் பாதுகாத்தற்குத் தக்கவழியாகும். மற்ற நேரங்களிலே அமைதிப் பொக்கிஷங்களாகிய திருமுறைத் திவ்யப்பிரபந்த ஆராய்ச்சிகளும் சாஸ்திர ஆராய்ச்சியும் செய்வது மனத்திற்கு ஊக்கமருந்து ஊட்டியது போலத் தளர்ச்சியைத் தள்ளிக்கொண்டிருக்கும்.

எல்லாவற்றையும்விட ஒன்றில் கவனமாயிரு. நீ அடைந்த அநுபவத்தைப் பெரிதென்று எண்ணாதே. அப்படி எண்ணுவது பிறருடைய அநுபவத்தை அவ

மதிக்கச்செய்யும். அவமதிப்பு அமைதிக்குப் பங்கம். பிறசமயங்களை வெறுத்தல் பெரிய அழிவுக்குக் காரணம். அது வேண்டவே வேண்டாம். ஆனால் உன்சமயத்தில் - சமயசாதனங்களில் பற்றுக் குறையாதே. அதில் அழுத்தம்வேண்டும் என்றுபதேசித்தார்.

அதனைக் கேட்ட அளவிலேயே அமைதியை அடைந்தான்; அதற்காக நெடுநாள்அலைந்து ஆராய்ந்து வந்தவன். அவனுக்கு அநுபவம் ஏற ஏற அமைதி வேர்கொண்டு நிலைபெறுவதாயிற்று. மலை நிலைகுலையினும் அவன் குலைவதில்லை. கடல் குழம்பினும் அவன் குழம்புவதில்லை. தெளிவும் அமைதியும் சேர்ந்த தெய்வக் காட்சியில் திகழ்ந்து வருகிறான்.

அன்பர்களே! நாமும் அமைதித் தெய்வத்தின் மடியில் அருமைக் குழந்தையாக வளரவேண்டுமானால் அதற்கான வழிகளை அநுபவத்தில் உணரவேண்டும். உணர்ச்சி உயர்வளிக்கும். அதுவே அமைதி. அதுவே ஆனந்தமான அமரவாழ்வு.

